IntSym 2019
9th International Symposium

# THE ADMINISTRATIVE OFFICERS DURING THE DUTCH RULE IN THE NORTHERN SRI LANKA: A HISTORICAL VIEW

**K. Arunthavarajah[121] & S. Mangalaruby[122]**

Correspondence: arunn.msu@gmail.com

## ABSTRACT

Sri Lanka which was under the grip of foreign rule hot her independence in 1948. During the rules of Portuguese, Dutch and British, Sri Lanka was a country to serve them in every sector. That's why, they introduced their own administrative structure or mechanism in Sri Lanka during their rule. The Dutch nationals who belonged to the European community and who had ruled Sri Lanka during the second period of foreign rule from 1658 to 1796 get distinction in terms of ruling in the history of Sri Lanka. They had kept the coastal area of the country under their control but also had appointed many indigenous officials in order to gain their profit from them and they considerably succeeded in their desired goals by means of implementing smooth administrative activities in those areas. So, as the Northern Sri Lanka was a part of their administrative territory, the applied economies in administration as far as they could and they involved themselves in exploiting the economy of the area. As certain posts seen in the administration of the rule of the Dutch were similar to the post used in the Jaffna Kings were favorable for activities of the Dutch, they had used them in their administration without any change. It is noteworthy to mention here that the Dutch had introduced some more new administrative posts in the Northern Sri Lanka. Among the administrative officers in the Northern Sri Lanka during the Dutch rule Tisavas, Athikaries, Mudaliars, Iraisuvathoor, udaiyar, vithanai, pattankattikal are important. However, the high posts such as Commanding Officers were in their own hands. The data needed for this study which is based on the historical approach were got from primary and secondary data base. While the government reports and documents during the Dutch rule got their primary preference, books, essays, newspapers, data derived from the internet got their secondary preference. The study aims at bringing about the administrative activities of the Dutch, their responsivities their natures, the challenges they had faced and their achievements. The main hypothesis of this study is to show that as far as the Dutch is concerned, the Dutch, their administration, the administration of the officers of local and the Dutch they had appointed had full intention of exploitation of the whole country. The research problem is that the Dutch officers along with indigenes official were behind the exploitation of the Northern Sri Lanka.

**Keywords**: Dutch rule, economic exploitation, administrative officers, Jaffna kingdom

## அறிமுகம்

ஐரோப்பியரது இலங்கை வருகைக்கு முன்னதாக வடஇலங்கை அரசானது குறிப்பாக யாழ்ப்பாண அரசானது சுதந்திரமானதொரு அரசாக இயங்கி வந்ததுடன் அக்காலத் தமிழ் ஆட்சியாளர்கள் தமக்கென ஒரு ஆட்சியமைப்பினையும் நிர்வாகத்தினையும் ஏற்படுத்திக்கொண்டு எவருக்கும் அடிபணியாததொரு அரசினை அப்பகுதிகளில் வைத்திருந்தனர். அவர்களது அரச இயந்திரத்தின் இயக்கத்திற்குத் தேவையானவற்றினை அவர்களால் நியமிக்கப்பட்ட சுதேச அதிகாரிகள் பலர் செய்து கொடுத்தனர். ஆனால் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றியதனைத் தொடர்ந்து அதன் சுதந்திரம்

[121] Department of History,University of Jaffna, Sri Lanaka.
[122] Department of History,University of Jaffna, Sri Lanaka.

பறிபோனதுடன் தமக்கேற்றதொரு நிர்வாகமுறையினையும் அவர்கள் வடஇலங்கையில் அறிமுகப்படுத்தியிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து அதிகாரத்திற்கு வந்த மற்றொரு ஐரோப்பியரான ஒல்லாந்தரது காலத்திலும்கூட அவர்களும் தமக்குச் சாதகமாக அமையக்கூடியதான நிர்வாகமுறை யொன்றினை வடஇலங்கையில் ஏற்படுத்தியிருந்தனர். ஒல்லாந்தரைப் பொறுத்தவரை அவர்களது நோக்கம் குறைந்த செலவில் அதிக இலாபம் உழைப்பதென்பதே. அவ்வகையில் இலங்கையினை நிர்வாகம் செய்த ஐரோப்பியர்களில் சிக்கனத்திற்கு முன்னுரிமையினை வழங்கியவர்களாக இவர்களைக் கருதலாம். இத்தகையதொரு பின்னணியிலேதான் அவர்களது நிர்வாக நடவடிக்கைகள் வட இலங்கை உள்ளிட்ட இலங்கையின் கரையோரங்களில் அமைந்தன. அதாவது சிக்கனம் ஒல்லாந்தரது நிர்வாகத்தில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தமையினால் அதற்கேற்றவாறு உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் நியமித்தனர். பொதுவாகக் கீழ்மட்ட வேலைகளுக்கு ஒல்லாந்தர் சுதேசிகளைப் பயன்படுத்தினர். அடிமட்ட மக்களுடன் பழகுவதற்கு அவர்களது மொழி தெரிந்திருக்க வேண்டுமென்பதுடன் அவர்களின் மூலமாகவே தமக்குத் தேவையான காரியங்கள் பலவற்றினை இலகுவில் நிறைவேற்றிக்கொள்ள முடியுமென்பது ஒல்லாந்தரது நிலைப்பாடாக இருந்தது. இதன்பொருட்டு இத்தகைய சுதேச அதிகாரிகளுக்குச் சலுகைகள் சிலவற்றினையும் ஒல்லாந்தர் அளித்தனர். இது காலப்போக்கில் சுதேச அதிகாரிகளுக்குத் தாம் சிற்றரசர்கள் என்ற நினைப்பினையும் உருவாக்கியது. ஒல்லாந்தர் நாட்டினைவிட்டு அகலும்வரை நிர்வாகத்தில் அவர்களுக்குச் சுதேச அதிகாரிகள் பக்கபலமாகவே இருந்தனர். இதனாலேதான் ஏறத்தாள 140 வருடங்கள் அவர்களால் வடஇலங்கையில் செல்வாக்கினைச் செலுத்த முடிந்ததென்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விமர்சன ஆய்வாக அமைந்த இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. ஒல்லாந்தர்கால அரசாங்க அறிக்கைகள், ஆவணங்கள் முதல்நிலைத் தரவுகள் வரிசையில் பிரதான இடத்தினைப்பெற பிற்பட்ட காலத்திற்குரிய நூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் என்பன இரண்டாம்நிலைத் தரவுகள் வரிசையில் இடம்பிடித்துள்ளன. ஒல்லாந்தரதுகால நிர்வாக அதிகாரிகளது நடவடிக்கைகள், அவர்களது பொறுப்புக்கள், இயல்புகள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், அடைந்த பலன்கள் போன்றவற்றினை வெளிக்கொண்டு வருவதனை ஆய்வானது பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. ஒல்லாந்தரைப் பொறுத்தவரை அவர்களது நிர்வாகமும் அதற்கென அவர்களால் நியமிக்கப்பட்ட தமது நாட்டு மற்றும் சுதேச அதிகாரிகளது செயற்பாடுகளும் வட இலங்கையினை மட்டுமன்றி முழுநாட்டினையும் சுரண்டுவதனையே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்ததென்பதே ஆய்வினது பிரதான கருதுகோளாக உள்ளது. மேலும் ஒல்லாந்த அதிகாரிகளுடன் சுதேச உத்தியோகஸ்தர்களும் இணைந்தே வடஇலங்கையின் பொருளாதாரச் சுரண்டலுக்கு காரணமாயினரென்பது ஆய்வினது பிரதான பிரச்சினையாகவும் உள்ளது.

**ஒல்லாந்தரின் இலங்கை வருகை**

பட்டேவியாவினைத் தமது கீழைத்தேய நாடுகளின் தலைமையகமாக ஏற்படுத்திக்கொண்ட ஒல்லாந்தர் தொடர்ந்து பின்னாளில் இலங்கையில் காணப்பட்ட வாசனைப் பொருட்களினால் கவரப்பட்ட நிலையில் இலங்கை வந்தடைந்தனர். அதுமட்டுமன்றி தென்னிந்தியத் துறைமுகங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதன் மூலமாக அவர்களது ஆதிக்கச் செயற்பாடுகளை விஸ்தரித்துக்கொள்ளலாமென்ற எண்ணமும்கூட சமகாலத்தில் ஒல்லாந்தர்களிடமிருந்தது.(Arasara tnam,S.1958,p.106) அவ்வகையில் 1802இல் முதன் முதலாக இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட ஒல்லாந்தருக்கு கண்டி மன்னனின் ஆதரவு இருந்தது. அக்காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த கண்டியரசன் இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு ஒல்லாந்தரது உள்நோக்கத்தினை ஆராய்வதனை விடுத்து அவர்களது உதவியினைப் பெற்றுக்கொள்வதிலேயேதான் அதிகளவிற்கு அக்கறையினைச் செலுத்தியிருந்தானென்பது கவனிக்கத்

தக்கது.(Gunasingam,M.2005,p.227)

1652இல் ஐரோப்பாவில் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையிலே சமாதானம் நீங்கிய நிலையில் அவர்களுக்கு முழுமையான அளவில் இலங்கையில் தமது ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.(அரசரட்ணம்,சி.1959,ப.82) தொடர்ந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிவந்த இவர்கள் 1658இல் வான்கோன்சின் (Van Goens) தலைமையில் பெரிய படையொன்றுடன் புறப்பட்டு முதலில் மன்னாரையும் நான்கு நாட்களின் பின்னராக யாழ்ப்பாணத்தினையும் போர்த்துக்கேயரிடமிருந்து மீட்டனர். மன்னாரின் முத்துக்களும் யாழ்ப்பாணத்தின் யானை வர்த்தகமும் ஒல்லாந்தரை இலங்கையின் வடக்கு நோக்கி நகர வைத்திருந்ததென்பதில் மாறறுக் கருத்துக்கள் இல்லை.

### வடஇலங்கையில் ஒல்லாந்த நிர்வாக அதிகாரிகளும் அவர்களது நடவடிக்கைகளும்

பொதுவாகப் போர்த்துக்கேயர் இலங்கையில் பின்பற்றிவந்த நிர்வாகமுறையிலும் பார்க்கத் தளர்வு கொண்டதாகவே ஒல்லாந்தரது நிர்வாகமுறை இலங்கையில் காணப்பட்டது. இவர்களும் போர்த்துக்கே யரைப் போலவே சில விடயங்களில் இலங்கையில் ஏற்கனவே இருந்தவந்த பாரம்பரிய நிர்வாகமுறை யினைப் பயன்படுத்தினர். அவ்வகையில் ஆங்கிலேயர் வரையான காலப்பகுதி முழுவதும் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையின் கரையோரப்பகுதிகள் முழுவதிலும் இவர்கள் ஒரு சீரான நிர்வாகமுறையினைப் பின்பற்றிவந்தமையினை அவதானிக்க முடிகின்றது. மேற்குறிப்பிட்டவாறு கீழைத்தேய நாடுகளின் அரசியல் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான தலைமையகமாகப் பட்டேவியாவினைக் உருவாக்கியிருந்த ஒல்லாந்தர் பட்டேவிய அரசாங்கத்தின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இலங்கையினைக் கொண்டு வந்தனர். அங்கிருந்த ஆள்பதியின் பணிப்புரைக்கு அமைவாகவே இலங்கையிலிருந்த அதிகாரிகள் ஆட்சிபுரிந்தனர். அத்துடன் இலங்கையிலிருந்த ஆள்பதிக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு பொலிற்றிக்ராட் எனப்பட்ட ஆலோசனைக்குழுவொன்றும் நியமிக்க ப்பட்டிருந்தது.

ஒல்லாந்தரது கட்டுப்பாட்டின் கீழிருந்த பகுதிகள் யாவும் கொழும்பு, காலி, யாழ்ப்பாணக் கொமாண்டரிகளாகப் பிரிக்கப்பட்டு அதன் நிர்வாகச் செயற்பாடுகளை அவர்கள் மேற்கொண்டனர். (Jeffries,Charles.1962,p.07) தற்காலத்தில் காணப்படுகின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பவை அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கொமாண்டரிக்குள் அடங்கியிருந்தன. யாழ்ப்பாணம் மற்றும் காலிக்கொ மாண்டரிகள் ஒல்லாந்தரது பிரதான தளபதிகளினாலும் ஆலோசனைச் சபையினாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தன. நிர்வாகத்தில் உள்நாட்டு அதிகாரிகளுக்கும் பங்கு வழங்கப்பட்டிருந்தாலும் ஏற்கனவே குறிப்பிட்டதனைப் போன்று உயர் பதவிகளில் ஒல்லாந்த அதிகாரிகளே காணப்பட்டனர். (Jeffries, Charles. 1962,p.07) குறிப்பாக உள்நாட்டு மக்களுக்கென கோறளைகள்(முதலியார்கள்), அத்துக்கோறளைகள்(உடையார்கள்), விதானைகள்,தலையாரிகள், கங்காணிகள் இது போன்ற சில பதவிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மேலும் இத்தகைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தினைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இலங்கையில் இவர்களது நிர்வாகத்தின் மையமாகக் காலி காணப்பட்டது. 1658இல் கொழும்பு கைப்பற்றப்பட்டதுடன் தமது நிலையான அலுவலகத்தினை கொழும்பிற்கு மாற்றினரென்பது குறிப்பிடத்தக்கது.

1658இல் வடஇலங்கையினைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த ஒல்லாந்தர் தென்னிலங்கையில் ஏற்கனவே கடைப்பிடித்து வந்த இயன்றளவு செலவினைக் குறைத்து முடியுமானவரை இலாபத்தினை அதிகரித்தல் என்ற கொள்கையினை இப்பகுதிகளிலும் பின்பற்றும் நோக்குடன் அதற்கேற்ற வகையிலான நிர்வாக முறையொன்றினை அறிமுகப்படுத்தியிருந்தனர். உண்மையில் இவர்கள் யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக இலங்கையின் கரையோரங்களில் பின்பற்றிய நிர்வாகமுறையானது போர்த்துக்கேயரது நிர்வாகமுறை போன்று மோசமாக இல்லையென்றாலும் அத்தகைய நிர்வாமுறையின் மூலமாக

நாட்டின் வளங்கள் அவர்களால் சுரண்டப்பட்டதென்பதை மறுக்க முடியாது.(Jeffires,Charles.1962,p.07) வடஇலங்கையில் இவர்கள் தமது நிர்வாக நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு புவியியல் ரீதியாகவும் சனத்தொகைக் கணக்கெடுப்பின் வழியாகவும் தேசவழமைகள் மற்றும் வழக்காறுகளைக் கையாண்டும் முயற்சிகள் செய்தனர்.

1659இல் போல்டேயர்ஸ் பாதிரியார் யாழ்ப்பாணப் பகுதியில் புரட்டஸ்தாந்து சமயத்தினைப் பரப்புகின்ற நோக்குடன் ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் தனது நூலொன்றில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகள் யாவும் தமிழர்களினால் நிர்வகிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றிக் கண்டியில் சிறை வைக்கப்பட்டிருந்த றொபேர்ட் நொக்ஸ் 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தான். பின்னர் அவன் எழுதிய நூலொன்றில் இடம்பெற்ற வரைபடத்தில் மேலே குறித்த பகுதிகள் யாவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாகப் பிரிவுகளாகக் காணப்பட்டுள்ளன. எனவே போல்டேயர்சின் கூற்றினை இத்தகைய இவரது வரைபடமானது நிருபிக்கின்ற வகையில் உள்ளதெனலாம் மேலும் நொக்ஸ் சிறையிலிருந்து தப்பி அனுராதபுரத்தினைச் சென்றடைந்ததாவும் பின்னர் அவன் அங்கு சந்தித்த மக்களுடன் உரையாட முற்பட்டபோது ஏற்கனவே சிங்களம் தெரிந்திருந்த அவனால் அவர்களுடன் உரையாட முடியவில்லை எனவும் அனுராதபுரத்தில் வாழ்ந்தவர்கள் மலபார் மொழியாகிய தமிழ் மொழியனைப் பேசியதாகவும் கூறியுள்ளான். இதன் மூலமாக 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழர்களின் செல்வாக்கானது அனுராதபுரத்தில் காணப்பட்டதனை அறியமுடிகின்றது. (குணசிங்கம்,மு.2008,ப.225) மேற்கூறப்பட்ட இத்தகைய கருத்தினை முன்வைக்கின்ற மு.குணசிங்கம் இதன் மூலமாகச் சிங்களவர் இன்று பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பகுதியான அனுராதபுரத்தில் தமிழரின் இருப்பினைக் கூறமுற்பட்டாலும்கூட இக்கூற்றில் எந்தளவிற்கு உண்மையுள்ள தென்பது அராயப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கையில் ஒல்லாந்தர் பற்றிய ஆய்வினை அதிகளில் மேற்கொண்ட சி.அரசரட்ணம் மேற்கூறப்பட்ட பிரதேசங்கள் யாழ்ப்பாணக் கொமாண்டரிக்குள் உள்ளடங்கியிருந்ததென்பதனை ஏற்றுக்கொள்ளுகின்றார்.(Arasaratnam,S.1958.p.221) எனவே பொதுவாக யாழ்ப்பாணக் கொமாண்டரியின் பரப்பானது புத்தளத்தின் வடக்கிலிருந்து வடமேற்காக வளைந்து சென்று வடகிழக்கு இலங்கையின் கடற்கரைப் பரப்புக்களையும் உள்ளடக்கியவாறு சென்று மட்டக்களப்புக் கோட்டையின் தெற்குவரை சென்றிருந்தது. அதேநேரத்தில் தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்த பகுதிகளிலொன்றான கிழக்குப் பகுதியில் காணப்பட்ட மட்டக்களப்புப் பிரதேசமும் தனியான தளிபதியினால் நிர்வகிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (Raven-Hart,R.1981,pp.46-57) இருப்பினும் சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக காலப்போக்கில் இம்முறையானது கைவிடப்பட்டது. அவ்வகையில் ஒல்லாந்தர் நாட்டினைவிட்டு அகலும்வரை வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள் யாவும் தனியான நிர்வாக அலகாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டதனைப் பல்வேறு ஒல்லாந்த ஆவணங்களிலிருந்தும் அவர்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்கள் பலரது கருத்துக்களிலிருந்தும் அறியமுடிகின்றது.

**கொமாண்டர்**

யாழ்ப்பாணக் கொமாண்டரியில் கொமாண்டர் எனப்பட்ட படைத்தலைவனொருவன் அதன் உயர் அதிகாரியாக விளங்கினான். அவ்வகையில் இவன் தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுக்குப் பொறுப்பாகக் காணப்பட்டான்.(Brohier,R,I.1984,pp.14-21) மேலும் யாழ்ப்பாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளுக்குக்கூட அவன் பொறுப்பாளியாக இருந்தான். அதேநேரத்தில் அவன் ஆட்சிக்குழுவின் (Political Council) உறுப்பினராகவும் செயற்பட்டான். கொமாண்டரின் பதவிநிலை ஒல்லாந்த ஆளுனருக்கு அடுத்தநிலையில் காணப்பட்டது. ஆளுனர்

கூட்டங்களுக்குச் சமூகம் தரமுடியாத நேரத்தில் அவருக்குப் பதிலாகக் கூட்டங்களுக்கு இவரே தலைமை தாங்குவார்.(பத்மநாதன்,சி.2001,ப.56)

**திசாவை**

கொமாண்டருக்கு அடுத்தநிலையில் திசாவை என்ற பதவி காணப்பட்டது. தரத்தில் உயர்ந்த நிலையில் காணப்பட்ட இப்பதவிக்கு ஒல்லாந்தரே நியமிக்கப்பட்டனர். காரணம் அந்தளவிற்கு இவர்கள் சுதேசிகளை நம்பவில்லையென்பதுடன் சுதேசிகள் சமகாலத்தில் தென்னிந்தியாவுடன் வைத்திருந்த தொடர்புகள் பற்றியும் அறிந்தவர்களாகவும் காணப்பட்டனர். கொமாண்டர் இல்லாத சமயங்களில் அவரது கடமைகளை இவரே மேற்கொள்ளுதல் வேண்டும். ஒல்லாந்தரது நிர்வாக முழுமைக்கும் கொழும்பே மையமாகக் காணப்பட்டபோதும் யாழ்ப்பாணம் மற்றும் காலிக் கொமாண்டரிகளின் நீதி, நிர்வாக அதிகாரமானது இவற்றிடம் அதிகரித்தே காணப்பட்டது. காலிக்கொமாண்டரியினைப் போன்றே யாழ்ப்பாணக் கொமாண்டரியும் உயரதிகாரிகளைக்கொண்ட ஒரு பேரவையினால் நிர்வாகம் செய்யப்பட்டது.(Silva, K.M.De.1981,pp.188-195)

**திசாவாக்கள்**

உள்நாட்டு நிர்வாகத்தின் அச்சாணியாக திசாவாக்கள் காணப்பட்டனர். ஆட்சியாளர்கள் சாதாரண மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவதற்கான ஊடகமாக இவர்கள் காணப்பட்டனர். மேலும் இவர்கள் யாழ்ப்பாணத்தரசர்களது காலத்திலும் சரி பின்வந்த போர்த்துக்கேயரது காலத்திலும் சரி இத்தகைய மேற்கூறப்பட்ட பணியினையே மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலத்தில் இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறை திசாவாக்களே காணப்பட்டனர். இவர்கள் கிராமங்கள் தோறும் சென்று நிர்வாகத்தினைச் சீர்படுத்துகின்ற நடவடிக்கைகளில் இறங்கினர். இவர்கள் மக்களுடன் நெருக்கமான வகையில் பழக வேண்டியிருந்தமையினால் அதற்கேற்ற வகையில் திறமையானவர்களாகவும் புத்திசாலிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வகையில் இவர்கள் அப்பகுதி மக்கள் பேசுகின்ற மொழியிலும் தேர்ச்சியுடையவர்களாக விளங்கினர்.

விவசாய அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகள் பலவற்றினை இவர்கள் முன்னெடுத்து அப்பகுதியின் பொருளாதாரத்திற்கு கணிசமான அளவு பங்களிப்பினைச் செய்திருந்தனர். 18ஆம் நூற்றாண்டில் புதிய பல பயிர்கள் வட இலங்கை உள்ளிட்ட சில பகுதிகளில் அறிமுகப்படுத்தப்படவும் இத்தகைய அதிகாரிகளே பின்புலமாக நின்றனர். திசாவாக்கள் மக்கள் பற்றியும் கிராமங்கள், சேரிகள், நிலபுலன்கள் தொடர்பாகவும் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும். மக்களின் கல்வி வளர்ச்சியின் பொருட்டுப் பாடுபடுதல் இவர்களது கடமைகளிலொன்றாகவும் கருதப்பட்டது. அத்துடன் இத்தகைய அதிகாரிகள் லஸ்கரின்கள் எனப்பட்ட தங்களது இராணுவத்தினைப் பாராமரிப்பதற்கான பொறுப்பினையும் உடையவர்கள். (Pieters, Sophia.1908,p.108)

ஆளுனர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் பட்டேவியாத் தலைமையகத்தினாலேயே நியமிக்கப்பட்டனர். இவர்களது நிர்வாகத்தின் அதிகாரமட்டமானது எழுதுவினைஞர்களிலிருந்து சிவில் அதிகாரிகளை உள்ளடக்கிய வகையில் அமைந்திருந்தது. கொழும்பினைத் தலைமையகமாகவும் காலி, யாழ்ப்பாணம் போன்றன ஒவ்வொரு தளபதியின் கீழும் விடப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது. இவர்களின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த உதவித் திசாவமார்கள் நிதி, நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்களாகக் காணப்பட்டனர். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு ஒவர்கூட் (Oppehoofed) எனப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.(கிருஸ்ணராஜா,செ.2000,ப.130) இவரது பணிகள திசாவாவிற்கு அடுத்த நிலையில் காணப்பட்ட உத்தியோகஸ்தர்களது பணியினை ஒத்த வகையில் காணப்பட்டிருந்தது. மேலும் ஒல்லாந்த நிர்வாகத்தில் உயர்மட்ட அதிகாரிகளும் மூன்று திசாவமார்களும் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கற்பிட்டி, மன்னார், திருகோணமலை,

மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு மேற்குறித்த நிர்வாகியினாலேயே நியமிக்கப்பட்டனர். மிகவும் அனுபவசாலியாகக் காணப்பட்ட இவர் சிறிய சபையொன்றின் உதவியுடன் தன்னுடைய பணிகளை மேற்கொண்டார். வடஇலங்கையில் ஒல்லாந்தர்களுக்கு சுதேச நிர்வாகத்தில் அனுபவம் உடையவர்களது தேவையும் அனுபவமும், மொழியறிவும் அவசியமானதாகக் காணப்பட்டது. இதனால் குறைந்த செலவில் அதிக இலாபம் என்ற அவர்களது கொள்கைக்கு அமைவாக வடஇலங்கையின் பல பகுதிகளிலும் தமது கீழ்மட்டத் தேவையினை நிவர்த்தி செய்கின்ற நோக்குடன் முதலியார்கள், விதானையர்களின் சேவைகளைப் பெற்றனர். இவர்களின் சேவைகள் கிராமிய, நகர மட்டங்களில் தேவைப்பட்டன. (Silva,K.M.De. &Beu mer,W.G.M.1988,pp.09-112)

திசாவாவின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக ஒல்லாந்த ஆளுனர் வான்கூன்சின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருந்தன.

*‘‘திசாவா அதிகாரி ஒல்லாந்தரின் எல்லா வகையான சட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் சுதேச இராணுவத்தின் உருவாக்கத்திற்கும் முழுமையான பொறுப்பினைப் பெற்றவன். தன்னுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஆளுனர் மற்றும் ஆலோசனைசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் அறிந்துகொள்ளுவான். சிலவகையான குடியியல் வழக்குகளில் தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரம் இவ்வதிகாரிகளுக்கு உண்டு. யாழ்ப்பாணத்தில் நீதித்துறை சார்ந்த ஒருவரோடும் மக்களில் வயது முதிர்ந்த வயோதிபர்கள் இருவருடனும் ஆலோசித்த பின்னரே அவன் தீர்ப்புக்களை வழங்க வேண்டும். அவ்வாறே மாதோட்டத்தில் அங்குள்ள அதிகாரிகள் மற்றும் பட்டங்கட்டிமார்கள் இருவரதும் ஆலோசனையின் பிரகாரமே தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. தொலைவில் காணப்படுகின்ற ஊர்களாயின் மூத்த இரு வயோதிபர்களது ஆதரவினைப் பெற்றால் மட்டும் போதுமானது. இவையெல்லாம் பத்து பர்தாக்களுக்கு குறைவானவை தொடர்பான குடியியல் வழக்குகளுக்குப் பொருந்தும். ஆனால் இத்தொகைக்கு அதிகமாக உள்ள விடயங்களுக்கு கொமாண்டரியினாலும் நீதித்துறையினாலும் மட்டுமே தீர்ப்புக்கள் வழங்கப்படும். உள்ளூர் சுதேச நிர்வாகிகளான முதலியார், பட்டங்கட்டிமார்கள், பண்டாரப்பிள்ளைகள், தலையாரிகள், வன்னியர் போன்றவர்களை அழைத்து ஆணைகளை வழங்குவதற்கும் அவர்களுக்குத் தண்டனைகளை வழங்குவதற்கும் இவர் அதிகாரம் கொண்டிருந்தார். ’’(அரசரட்ணம்,சி.1959,ப.82)*

**அதிகாரிகள்**

அதிகாரி எனப்பட்ட பதவியானது யாழ்ப்பாணத்தரசர் காலத்தினைத் தொடர்ந்துவந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தரது காலங்களிலும் வடஇலங்கையில் தொடர்ந்து வந்தது. யாழ்ப்பாணத்தரசர் மற்றும் போர்த்துக்கேயரது காலங்களில் இவர்கள் மாகாணங்களை நிர்வாகம் செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் சம்பளம் எதுவும் பெறுவதில்லை. மக்களே இவர்களுக்கு வேண்டிய வற்றினை வழங்கினர். ஆனால் காலப்போக்கில் அதிகாரிகளின் சம்பளத்தின் பொருட்டு இவர்கள் வரி செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வெள்ளாளர், தனக்காரர், சண்டாளர் போன்ற சாதியினரே பெருமளவிற்கு இத்தகைய வரிகளைச் செலுத்தினர். இவர்கள் இருவகைப்பட்ட நிலையில் காணப்பட்டனர். ஒரு பிரிவினர் பிரதேசவாரியாக நிர்வாகத்தில் தலைமைப்பதவிகளையும் பொறுப்புக்களையும் பெற்றனர். மற்றைய பிரிவினர்கள் நளவர், தச்சர், வண்ணார், கைக்கோளர், கரையார் போன்ற பிரிவினர்களது தலைவர்களாகக் காணப்பட்டனர். வரிகள், சேவைகளை இவர்கள் அரசிற்குப் பெற்றுக்கொடுத்த னர்.(பத்மநாதன்,சி.2011,ப.108)

**முதலியார்கள்**

முதலியார்கள் என்பவர்கள் யாழ்ப்பாண அரசு காலத்திலேயே வடஇலங்கையில் செல்வாக்குப் பெற்ற பிரிவினர்களாக இருந்துள்ளனர். இவர்கள் அக்ககாலப்பகுதியில் அரசரின்

விசுவாசிகளாகவும் நிர்வாகத்தில் அனுபவம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். முடிவுகள் பலவற்றினை அரசர்கள் இவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே எடுப்பது வழக்கமாகக் காணப்பட்டது. மேலும் படைநிர்வாகம், பொதுநிர்வாகம், நீதிபரிபாலனம் போன்றவற்றுடன் தொடர்புபட்டவர்களாக இவர்கள் காணப்பட்டனர். தென்னிந்தியச் செல்வாக்கினால் ஏற்பட்ட விளைவுகளிலொன்றாகக்கூட இதனைக் கருதலாம். இத்தகைய செல்வாக்கினைப் பெற்றிருந்த இவர்களை ஒல்லாந்தர் ஒடுக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் இறுதியில் ஆட்சிக்குத் தேவையான ஆதரவினை இவர்களிடமிருந்தே பெற வேண்டியதாயிற்று. ஒல்லாந்தர் வடஇலங்கையினைக் கைப்பற்றியதும் மக்களுக்குத் தேவையான நீதிமன்றங்களை நிறுவினர்.(Silva,K.M.De.&Beumer,W.G.M.1988,pp.09-112) இதில் முதலியார்கள் பலரையும் அங்கத்தவர்களாக நியமித்தனர். தங்களது பொறுப்பில் காணப்பட்ட மாகாணங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையினை ஒல்லாந்த அரசிற்கு முதலியார்கள் காலத்திற்குக் காலம் வழங்குதல் அவசியமாகக் கருதப்பட்டது.

**இறைசுவதோர்**

இறைசுவதோர் என்ற பதவிப் பெயரானது போர்த்துக்கேயரது காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வந்துள்ளது. அரசாங்கத்தினது வரிகளைச் சேகரிக்கின்ற பொறுப்பு இவர்களிடமேயே வழங்கப்பட்டது. மேலும் வடஇலங்கையில் செல்வாக்குடன் திகழ்ந்த குடும்பத்தினைச் சேர்ந்தவர்களே இத்தகைய பதவியினை அலங்கரித்தனர். 17ஆம் நூற்றாண்டின் முடிவில் இப்பதவியில் இருந்த பலரும் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இதனால் இவர்கள்மீது நிர்வாகத்திலுள்ள பதவிகளைத் தங்களது உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுத்தார்களென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இவர்கள் அரசாங்கத்திற்குரிய தலைவரி, நிலவரி, தொழில்வரி, அதிகாரிவரி போன்றவற்றினை வசூலித்துக் கொடுத்ததுடன் அரசாங்கத்திற்குச் செய்ய வேண்டிய ஊழியம் என்ற சேவையினையும் செய்துவந்தனர். இவர்களுக்குப் பண்டாரம்பிள்ளைகள், உடையார், தலையாரி போன்றவர்கள் கிராமங்களில் வரிகளைச் சேகரிப்பதற்கு உதவினர். இறைசுவதோர், பண்டாரம்பிள்ளைகள் போன்றவர்களுக்கு மக்களிடமிருந்து பெறப்படுகின்ற வரிகளின் மூலமாகவே ஊதியங்கள் வழங்கப்பட்டன. (பத்மநாதன்,சி.2011,பக்.128-130)

**உடையார்**

நீண்டகாலமாகவே உடையார் என்ற சொல்லானது இலங்கையில் பயன்பாட்டிலிருந்து வந்துள்ளது. யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரை இவர்களது நிலையானது ஒரு கிராமத்தலைவரின் நிலையினை ஒத்திருந்தது. இறைசுவதோர்களின் கீழ் இவர்கள் கடமையாற்றினர். உடையார்கள் மக்களிடமிருந்து பெறுகின்ற வரிகளுக்குப் பதிலாக பட்டோலைகளை எழுதி வழங்குவர். பின்னர் இதனை இறைசுவதோரிடம் ஒப்படைத்துவிட்டு பற்றுச்சீட்டினைப் பெறுவர். மேலும் கிராமங்களில் நடைபெறுகின்ற களவு, கொள்ளைகள் போன்றவற்றினைக் கட்டுப்படுத்துவதுடன் நாட்டில் அமைதியினை நிலைநாட்டுகின்ற பொறுப்பினையும் உடையார்கள் கொண்டிருந்தனர்.(பத்மநாதன்,சி.2011,பக்.128-30) இன்றும்கூட இவர்களை நினைவுபடுத்தும் வகையில் “உடையார் ஒழுங்கை” என வட இலங்கையின் சில ஊர்களிலுள்ள வீதிகள் சிலவற்றுக்குப் பெயருண்டு.

**தலையாரி**

ஊர்களின் தலைமைக்காரரைத் தலையாரி என அழைப்பர். ஊர்மட்டத்திலுள்ள தலைமைக் காரர்களின் ஊடாகவே அரசாங்க அதிகாரிகள் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதென்பது வழக்கமானதாக இருந்தது. வரிகளைச் சேகரித்தல், ஊரினைப் பாதுகாத்தல் போன்றன இவருக்கான கடமைகளாகக் காணப்பட்டன.(குணசிங்கம்,மு.2008,ப.259)

இத்தகைய சேவைகளுக்கு இவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படாமல் பதிலுக்கு வயல் நிலங்கள் வழங்கப்படுகப்பட்டன.

**வன்னியனார்**

வன்னிப் பற்றுக்கள் எனப்பட்ட குறுநிலப்பிரிவுகளுக்கு வன்னியனார் பொறுப்பாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தினுள் பனங்காமம், கரிக்கட்டுமூலை, கருநாவல்பற்று, மேற்பற்று, முள்ளியவளை, தென்னைமரவடி, செட்டிகுளம் போன்ற வன்னிப் பிரிவுகள் அடங்கியிருந்தன. இவை பெருமளவிற்குச் சுயாட்சி கொண்ட அமைப்புக்களாகவே காணப்பட்டன. வன்னியனார் தமது பகுதிகளில் சிற்றரசர்கள் போன்று செயற்பட்டனர். அத்துடன் இவர்கள் தமது பகுதிகளில் சுயாட்சி அதிகாரம் மிக்கவர்களாகவும் விளங்கினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் வரிசை கூடுகின்ற சந்தர்ப்பங்களில் இவர்கள் கலந்துகொள்ளவார்கள். ஒல்லாந்தரது நிர்வாகத்திலும் இவர்களது நடவடிக்கைகள் தொடர்ந்தன. வரிசை எனப்படுவது நிர்வாகப் பதவிகள் வகிக்கும் தலைமைக்காரர்கள் வருடாந்தம் இராசதானியில் கூடுவதனைக் குறிக்கும்.(பத்மநாதன்,சி.2001.ப.57) அவ்வகையில் யாழ்ப்பாண அரசு காலத்தில் முக்கியமான நிர்வாகப் பதவிகளிலொன்றாகக் கருதப்பட்ட உடையார் பதவியானது அதேபோன்ற நிலையில் ஒல்லாந்தரது காலத்தில் காணப்படாதுவிட்டாலும்கூட ஓரளவிற்குச் செல்வாக்கமிக்க பதவியாகவே தொடர்ந்தும் காணப் பட்டது.

போர்த்துக்கேயரது நிர்வாகத்தில் ஏற்கனவே இருந்துவந்ததனைப் போன்று ஊதியமின்றி ஊழியம் செய்ய வேண்டுமென்றநிலை தொடர்ந்தது. ஒல்லாந்தரது ஆவணங்களில் இவை தொடர்பான குறிப்புக்கள் உள்ளன. வெள்ளாளர், மடப்பள்ளி எனும் சாதியரில் ஒவ்வொருவரும் மாதமொரு நாளைக்குச் சேவை புரிதல் வேண்டும். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுகள் ஆகிய பற்றுக்களிலிருந்து தினமும் 500 பேர் வரையானவர்கள் சேவை செய்து வந்தனர். அவர்களில் 120பேர் ஊர்காவற்றுறையிலுள்ள தென்னந்தோட்டத்திற்கும் 120பேர் பருத்தித்துறையிலே அமைக்கப்பட்ட இராணுவத் தளத்திற்கும் பணியாற்றச் சென்றனர். ஏனையவர்கள் இதர வேலைகளில் ஈடுபட்டதாகவும் குறிப்புக்கள் உள்ளன. நளவர், பள்ளர், தச்சர், கம்மாளர் போன்றவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட் டனர்.(பத்ம நாதன்,சி.2001,ப.57)

**விதானைமார்கள்**

கிராமங்கள் ஒவ்வொன்றிலும் விதானை எனப்பட்ட அதிகாரிகள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். இவர்கள் கிராம அடிப்படையில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்பவராகக் காணப்பட்டனர். விதானைமார்கள் கிராமங்களில் சேகரித்த வருவாயினை அரசாங்கத்திற்கு அனுப்புவாரகள். இலவச அடிப்படையில் அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய சேவையினையும் கிராம மட்டத்தில் பெற்று அவற்றினை அரசிற்கு வழங்கும் பொறுப்பும் இவர்களுக்குரியதே. தங்களது பகுதியின் திசாவாவின் மேற்பார்வையிலேதான் இவர்களது நடவடிக்கைகள் அமைந்தன.

பொதுவாகவே ஒல்லாந்தரின் நிர்வாகமானது வியாபாரம், இராணுவம், குடியியல் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. வியாபாரத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் வியாபாரம், அது பற்றிய கணக்குகள் போன்றனவற்றினைக் கவனித்தனர். சிறிவர்(லிகிதர்), அசிஸ்ரன்ட்(உதவியாளர்), பகவுடர்(லிகிதர்-வியாபாரி), அவுதர் கூப்மன்(ஒப்பர்கூப்மன்) போன்றவர்கள் மேற்குறித்த நடவடிக்கைகளில் பங்கெடுத்த உத்தியோகஸ்தர்களாகக் கருதப்படுகின்றனர்.(சிவசாமி,வி.2014,ப.93) குடியியல் பாலன அதிகாரிகள் வியாபாரத்திற்கு வந்தவர்கள் மத்தியிலிருந்து தெரிவாகினர். இவர்கள் ஒப்பர்கூப்மன், கூப்மன் என அழைக்கப்பட்டனர்.

1658இல் ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்ட சில பதவிகளுக்கான பெயர்களும் குறித்த சுதேசிகள் பற்றிய விபரங்களும் பின்வருமாறு உள்ளன.

| | | |
|---|---|---|
| இராசகாரிய முதலியார் | - | வலிகாமம் பற்று, தீவுப்பற்று |
| கனகராய முதலியார் | - | வடமராட்சி |
| சேதுகாவல முதலியார் | - | தென்மராட்சி |
| சேதுராய முதலியார் | - | பச்சிலைப்பள்ளி |

ஒல்லாந்தர் வடஇலங்கையில் கைக்கொண்ட நிர்வாகமுறையின் மூலமாக அதனது பொருளாதார வளங்கள் சுரண்டப்பட்டன. அதற்கு உள்ளூர்வாசிகள் சிலரும் பக்கபலமாக இருந்தனரென்பதனையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வடஇலங்கை மக்களது தொழில்களின்மீது வரிகளை விதித்தமை ஒருபுறமிருக்க மறுபுறத்தில் அவர்களது வருமானத்தினைத் தடை செய்ததுடன் சில தொழில்களை அவர்களிடமிருந்து பறித்து அவற்றினைத் தனியுரிமையுமாக்கினர். எடுத்துக்காட்டாக முத்துக்குளித்தல், யானை வர்த்தகம் என்பனவற்றினைக் குறிப்பிடலாம். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு அதிக வரியினை விதித்துவந்த ஒல்லாந்தர் தமது வருமானத்தினை மேலும் அதிரிக்கின்ற நோக்குடன் உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடன் தோம்பினைப் புதுப்பித்து பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்கும் ஆட்களுக்கும் வரியினை அறவிடுகின்ற முறையினை நடைமுறைப்படுத்தினர்.(Pieris,P.E.1995,p.27) அவ்வகையில் காணி முகாமைத்துவமென்பது ஒல்லாந்தரது நிர்வாகக்கொள்கையின் முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. அதாவது 18ஆம் நூற்றாண்டிலே இதுவே இவர்களது அரசுக்கொள்கையின் பிரதான அம்சமாகக் காணப்பட்டதுடன் அவர்களுக்குத் தொடர்ச்சியான பிரச்சினையினைக் கொடுத்துவந்த விடயமாகவும் அது விளங்கியது.

**நிறைவுரை**

போர்த்துக்கேயரிடமிருந்து வடஇலங்கையினைக் கைப்பற்றிக்கொண்ட ஒல்லாந்தர் தமது நாட்டில் காணப்பட்ட நிர்வாகமுறையினை ஒத்த ஒரு நிர்வாகமுறையினை அவர்கள் வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் கரையோரங்களில் புகுத்தவில்லை. காரணம் ஏற்கனவே நடைமுறையிலிருந்து வந்தமுறையானது வடஇலங்கை மக்களுக்குப் பழக்கப்பட்டமுறையாக இருந்ததுடன் அது ஒல்லாந்தரது வருமானத்தினை அதிகரிப்பதற்கு ஏற்ற முறையாகவும் அதேநேரத்தில் எளியமுறையாகவும் இருந்தமையினால் ஒரு சில மாற்றங்களுடன் அத்தகைய முறையினைத் தொடர்ந்தும் பயன்படுத்தினர். உயர் பதவிகளில் தமது அதிகாரிகளையே நியமித்தும் இருந்தனர். கீழ்மட்டத்திலிருந்த உள்ளூர் அதிகாரிகளின் உதவியினைத் தேவைப்பட்டபோதெல்லாம் பெற்றனர். ஒல்லாந்தரைப் பொறுத்தவரை அவர்கள் தமது வருவாயினை பெருக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டதே வடஇலங்கையின் நிர்வாகமுறை. அதற்கு மதத்தினையும் பல இடங்களில் ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருந்தனர். பொதுப்பட ஒரு சிலரைத் தவிர வடஇலங்கை மக்களில் சிலர் சலுகைகளுக்காகவும் வசதிகளுக்காகவும் புரட்டஸ்தாந்து மதம் மாறியதுடன் அக்காலப்பகுதியில் அவர்களது நிர்வாகத்திலும் பங்கு கொண்டு வடஇலங்கையின் பொருளாதாரச் சுரண்டலுக்குக் காரணமாயினர். அவ்வகையில் சுதேச அதிகாரிகளின் பங்களிப்பு இல்லையெனில் ஒல்லாந்தரது நிர்வாகமானது வடஇலங்கையில் குறித்த காலப்பகுதியில் சிறப்பாக இயங்கியிருக்க முடியாதென்பதில் மாற்றுக்கருத்துக்கள் இல்லை.

**உசாத்துணை நூல்கள்**

அரசரட்ணம்,சி.(1959), “இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்”, இளங்கதிர், இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு.

கிருஷ்ணராஜா,செ.(2000)இ இலங்கை வரலாறு, பாகம்-02, பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.

குணசிங்கம்,மு.(2008), இலங்கையில் தமிழர், எம்.வி.வெளியீடு, சிட்னி.

சிவசாமி,வி.(2014), இலங்கை வரலாறு (கட்டுரைகளின் தொகுப்பு), (ப.ஆ.)க.அருந்தவராஜா, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

பத்மநாதன், சி.(2011), யாழ்ப்பாண இராச்சியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பத்மநாதன், சி.(2001), இலங்கைத் தேசவழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

Arasaratnam,S.(1958),The Dutch Power in Ceylon 1658-1687, New Delhi.

Brohier,R.I.(1984), Changing Face of Colombo, Lake House Investments Ltd, Colombo.

Jeffries, Charles.(1962), Ceylon – The Path to Independence, Pali mall Press, London.

Perera,S,G.(1948), History of Ceylon, Lake House, Colombo.

Pieters, Sophia.(1908), (translated) Instructions From the Governor General and Council of India to the Governor of Ceylon 1656-1665, Colombo.

Raven-Hart,R.(1981), Ceylon- History in Stone, Lake House Investments Ltd, Colombo.

Silva,K.M.De.(1981), A History of Sri Lanka, C.Hurst&Co, London.

Silva,K.M.De.& Beumer,W.G.M. Illustrations and Views of Dutch Ceylon 1602-1796, Colombo.